Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

Spl.S.C.No.63/2025

Dated 12-03-2026
Deposition of witness for : PW 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரண்ராஜ் | வயது | : | 32 |
| தந்தை பெயர் | : | சிவானந்தம் | தாலுக்கா | : | பாபநாசம் |
| கிராமம் | : | வீரமாங்குடி | தொழில் | : | விவசாயம் |

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 2 present, A1 absent 355 BNSS Petition filed and allowed.**

**Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) என்னை போலிசார் எந்த ஆண்டு எந்த மாதம் விசாரித்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

2) எழுத்துமூலமாக நான் வாக்குமூலம் எதுவும் எழுதி கையெழுத்து போட்டு கொடுத்தேனா

என்றால் கொடுக்கவில்லை. போலிசார் ஏதாவது வாக்குமூலம் எழுதினார்களா என்றால் தெரியவில்லை.

3) என்னிடம் போலிசார் மாதிரி கையொப்பம் பெற்றார்களா என்றால் எதுவும் என்னிடம் பெறவில்லை.

4) நான் 2013ம் ஆண்டு ஆவணங்களில் கையொப்பம் இட்டு உளுந்து விதை மாணியவிலையில் நான் பெற்றுள்ளேன் என்றும், மாணிய பதிவேட்டில் அதற்கு உரிய கையொப்பம் போட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.

5) நான் போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் முதல் விசாரணையில் வழக்கை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

6) கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் சுன்ராஜ் என்ற பெயர் என்னடையது அல்ல. என்னிடம் காட்டப்பட்ட ஆவணங்களில் சுன்ராஜ் அப்பா பெயர் சிவானந்தம் என்று கண்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7) வழக்கில் சொல்லப்பட்டுள்ள சாட்சி சுன்ராஜ் அப்பா பெயர் சிவானந்தம் நான் அல்ல என்று சொன்னால் சரிதான்.

மறு விசாரணை

என் அப்பா பெயர் சிவானந்தம் என்றால் சரிதான். நீதிமன்றத்திலும் என்அப்பா பெயர் சிவானந்தம் என்றுதான் சொல்லி உள்ளேன்.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.03.12 18:29:12 +0530